# பூராடம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ பூராடம் சக்தி**

பரமபோதம்போத ரகித சகிதம்

சம்பவாதீதம் அப்ரமேயம்

**3. திருப்பாவைபாசுரம் – 12 பூராடம் இயல்பு**

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி

நினைத்து முலைவழியே நின்று பால் சோர

நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்

பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்

சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற

மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்

இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்

அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/uS6J9XHfpPU**

**விளக்கம் :**

மடியிலிருந்து மாடு கனைத்து கறப்பார் இன்றி, கன்றுக்கு ஈவதாக எண்ணிப் பாலை தானாக பொழிகிறது.

பாலைப் பொழியும் பசு நிபந்தனை ஏதும் இல்லாமல் அன்பை அலை அலையாய் பொழிகிறது. நனைத்து இல்லம் சேறாக்கும் என்ற பாசுர சொல்லுக்கேற்ப இல்லம் முழுவதும் சுற்றமும் நட்பும் சூழ இருந்து

விருந்துண்டு பூராடத்தின் செல்வாக்கே ஊரறியச் செய்யும், அதீதமான சம்பவங்கள் நிறைந்த பூராடம் சாதனைகளை குவித்த வண்ணம் ஒவ்வொரு சம்பவத்திற்கும் அல்லது ஒவ்வொரு வருடத்திற்கும் புதியதோர் சாதனை செய்து புதியதோர் உலகிற்கு புதிய போதனைகள் பல தந்து பாராட்டுகள் பெறுவர். நற்குடி நங்கை என பெயரெடுக்க நல்ல பல செல்வங்களை பெற்று அந்த செல்வங்களை தகுந்த வழியில் தக்கவர்களுக்கு தப்பாமல் அளிப்பாய். உன்னிடம் எதிரியானவர்களின் தலைகள் பத்தானாலும் அவைகள் உதிரியாகிவிடும். உனது மனதுக்கு இனியவனை பாடச்செய்வதே புகழச் செய்வதே பூராடத்தின் போதனை பொருளாகும். மேலும் பக்குவமான நேரத்தில் தகுதியான ஆத்மாக்களுக்கு தனது உற்ற நண்பர்கள் போல் பழகி அவர்களை கரை சேர்ப்பார்கள். எனவே சகாக்களுக்கும் சகிக்களுக்கும் புதியதோர் சிந்தனையையே போதிக்க வரும்.

நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் பூராடமே. எதிர்பார்ப்பு இல்லாத அன்பு செலுத்தும் வள்ளல் பெரும் பசுக்களையும் தாண்டி இல்லம் சேறாக்கும் எருமைகள் அருமை பூரண குருவிற்கு ஒப்பாகும். பூராடங்கள் மனித தலை வீழ நின் வாசல் கடைபற்றி சொல்பல சொல்லில் பரம போதனையை செலுத்தி தலைகனத்தை வீழச் செய்யும் போதனைச் செம்மல் பூராடமேயாகும்.

பனித்தலை வீழாது இமயமாக நின்றிருக்கும்; போத ரஹித, சகிதத்தால் பல்வேறு சூழ்நிலைகளை உருவாக்கி பனித்தலையை விழவைக்கும் ரகசியங்கள் பூராடங்களுக்கே தெரியும். இந்த வகையான குரு அம்சங்கள் பூரண மகிழ்ச்சியை அளிக்கும். சினத்தினால் தென்னிலங்கை கோமானை வதம் செய்த விதமே சம்பவ அதீதமாகும். சம்பவங்களின் விளைவாக மனம் சினம் கொள்வதோ, சினம் மனம் கொள்வதோ சூழ்நிலைகளை பொருத்தே அமையும்.

அனைத்து இல்லத்தாரும் அறிந்து பூராடத்திற்கு பூணூல் எதற்கு? பூராடமதற்கு அனைத்து இல்லத்தாரையும் கடைத்தேற்றி, அற்புதங்கள் பலபுரிந்து உய்யச் செய்வாரன்றோ; எனவே இது பேருறக்கம் அல்ல; ஈதென்ன பேருறக்கம் என சொல்ல! உறக்கத்திலும் நீ சிறப்பாய். பூராடமே வருக! பூராடமே அருள்க!

## **4. வேதத்தில் பூராடம் ஜோதிசக்தி**

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

சமுத்ரகாமாயை வித்மஹே
மகா பிஜிதாயை தீமஹி
ஆஃபா திவ்யா தீமஹி
பூர்வாஷாடா ப்ரசோதயாத்

சம்பவ சந்தையில் சிந்திப்பாய்
அப்ரமேயமாய் செயல்படுவாய்
போதனை சாதனை முடித்திடுவாய்
வேதனை எல்லாம் மறைந்திடுமே

எதிர்பார்ப்பில்லா அன்பு செயல்
உதிர்மலர் போல அறிவு செயல்
மதி உடல் காக்கும் கரும்பு வயல்
விதியை வெல்லும் நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. பூராடம் கவிதை

காதலாகி கசிந்துருகி பாத்திரம் செய்வர்
போதலாகி புணர்ந்தறிந்து சமரசம் காண்பர்
காதலாகி சம்பவங்கள் ஆத்மசகிதம் உண்பர்
ஆதலாகி அப்பிரமேயம் அதனில் ஆடுவர்

கொஞ்சி கொஞ்சி பேசினாலும் அது கருத்தே
வஞ்சி அஞ்சி வாதிட்டாலும் அது குறுத்தே
வாஞ்சி வாங்கி வழக்கிட்டாலும் அது வெற்றிக்கே
கஞ்சிக் கலயம் வெள்ளியாகிலும் அது சுகத்திற்கே

போராடும் பூராடம் போர் அடிக்க யானை வருமே
பாராரும் பாராட்ட பரிசுபெற மானே வருமே
தேரோடும் போர்க்களத்தில் கர்ணன் வானே வருமே
வேரோடும் தோல்வியிலும் நிலைமாறாக் கானே வருமே

விடாக்கெண்டன் விட்டுக் கொடுக்காத விவஹாரி
கொடாக்கெண்டன் புரிந்து கொள்ளாத வியாபாரி
தொடாக்கெண்டன் தொடர்ந்து செல்லாத சம்சாரி
வாடாக்கெண்டன் வாடிக்கையிலாத சுகவாசி

சுற்றமும் நட்பும் சூழும் உன் உலகில்
மற்றை நம் காமங்கள் ஆளும் உன் வீட்டில்
கற்றநின் வாதங்கள் பாடும் உன் பேச்சில்
அற்ற நின் பாவங்கள் நிற்கும் உன் நிலையில்

போதரகித சகிதம் கல்யாண சமையல் சாதம்
அப்பிரமேய உசிதம் பல்யாக மையல் போதம்
சம்பவ போத பயணம் வல்யோக தையல் வாதம்
பரம பாவன பாக்கியம் கல்மேல் எழுத்து வேதம்

## 6. அபிராமி அந்தாதியில் பூராடம் சக்தி

**குழந்தைப்பேறு உண்டாகள**

தாமம் கடம்பு; படைபஞ்சபாணம்; தனுக்கரும்பு;

யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது; எமக்கென்று வைத்த

சேமம் திருவடி; செங்கைகள் நான்கு; ஒளி செம்மை; அம்மை

நாமம் திரிபுரை; ஒன்றோடு இரண்டு நயனங்களே.

**தொழிலில் மேன்மை அடைய**

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்

அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையப்

பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும், பாடவும்பொன்

சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

**விதியை வெல்ல**

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில்; தாயரின்றி

மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை; மால்வரையும்

பொங்குவர் அழியும்! ஈரேழ்புவனமும் பூத்த உந்திக்

கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

**தனக்கு உரிமையானதைப் பெற**

குறித்தேன் மனத்தில் நின்கோலம் எல்லாம்; நின் குறிப்பறிந்து

மறித்தேன் மறலிவருகின்ற நேர்வழி; வண்டுகிண்டு

வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்

பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் பூராடம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் விஸ்வமூர்த்தயே நம | – விஸ்வமூர்த்தியே போற்றி |
| ஓம் மஹாமூர்த்தயே நம | – மஹாமூர்த்தியே போற்றி |
| ஓம் தீப்தமூர்த்தயே நம | – தீப மூர்த்தியே போற்றி |
| ஓம் அமூர்த்திமதே நம | – கர்மாவின் மூர்த்தியே போற்றி |
| ஓம் அநேகமூர்த்தயே நம | – அநேக மூர்த்தியே போற்றி |
| ஓம் அவ்யக்தாய நம | – வரையறுக்க முடியாதவனே போற்றி |
| ஓம் ஸதமூர்த்தயே நம | – சத்திய சம்பவமூர்த்தியே போற்றி |
| ஓம் ஸதாநநாய நம | – சதமெனும் 100 மூர்த்தியே போற்றி |
| ஓம் ஏகாஸ்மை நம | – மனங்காணும் அந்தர்யாமியே போற்றி |
| ஓம் நைகஸ்மை நம | – மாயையின் அநேக மாற்றமே போற்றி |
| ஓம் ஸவாய நம | – நிலவருகே உள்ள நிஜ நட்சத்திரமே போற்றி |
| ஓம் காய நம | – பூரண மகிழ்ச்சிக் கடலே போற்றி |
| ஓம் கஸ்மை நம | – இதனால் அறியும் ஏனைய நீதிகளே போற்றி |
| ஓம் யஸ்மை நம | – இயற்கை நீதி தரும் இனிய சந்தோஷமே போற்றி |
| ஓம் தஸ்மை நம | – விரிவாக்கமே, விவரமே, விஸ்தாரமே போற்றி |
| ஓம் பதம நம | – ஞான வீரங்காணும் உத்தம நிலைப்பாடே போற்றி |
| ஓம் லோகபந்தவே நம | – உலகியல் குருவான உண்மை நண்பனே போற்றி |
| ஓம் லோகநாதாய நம | – லோகநாதனான நாயக பிரபாவமே போற்றி |
| ஓம் மாதவாய நம | – மதுவெனும் இனிய கூட்ட பிரதிநிதியே போற்றி |
| ஓம் பக்தவத்ஸலாய நம | – வழிபடும் பக்தர்களின் இனிய சிற்றன்னையே போற்றி |
| ஓம் ஸுவர்ணவர்ணாய நம | – தங்கம் செய்யும் என்று அதையும் தாண்டிய செயலே போற்றி |
| ஓம் ஹேமாங்காய நம | – எதையும் தாங்கும் தங்கத்தேரே போற்றி |
| ஓம் வராங்காய நம | – விழிப்புணர்வு கட்டுரையே போற்றி |
| ஓம் சந்தநாங்கதிநே நம | – பூரண சந்தோஷத்தை அள்ளித் தரும் பூர்வாங்கமே போற்றி |
| ஓம் வீரக்நே நம | – ஆணவ நாயகரை அழிக்கும் கர்ம தேவனே போற்றி |
| ஓம் விஷமாய நம | – ஒப்பில்லா உத்தம பெருமானே போற்றி |
| ஓம் ஸுந்யாய நம | – சும்மாயிருக்கும் நாராயண சிந்தனையே போற்றி |

| | |
|---|---|
| ஓம் க்ருதாஸீஷே நம | – மாறாத அன்பு கலந்த வாழ்த்துக்களே போற்றி |
| ஓம் அசலாய நம | – அனந்த, ஆனந்த, உண்மை பேரறிவே போற்றி |
| ஓம் சலாய நம | – மூச்சும் பேச்சாகி செயல்படும் வினையே போற்றி |
| ஓம் அமாநிநே நம | – உடலில் கலந்த உயிரே, உணர்வே போற்றி |
| ஓம் மாநதாய நம | – சுயநினைவில்லா மாயை மனமே போற்றி |
| ஓம் மாந்யாய நம | – மனங்கள் தொழும் மன்மதக் கவர்ச்சியே போற்றி |
| ஓம் லோகஸ்வாமிநே நம | – ஈரேழு உலகத்தின் நாயகரே போற்றி |
| ஓம் த்ரிலோக த்ருதே நம | – மூவுலக அறிவு உதவும் கரங்களே போற்றி |
| ஓம் ஸுமதஸே நம | – சுயமேதாவி சுரக்கும் அறிவே போற்றி |
| ஓம் மேதஜாய நம | – யாகத்தில் தோன்றும் நிஜமே போற்றி |
| ஓம் தந்யாய நம | – எல்லையில்லா அனுபவே திருப்தி தரும் உன்னதமே போற்றி |
| ஓம் ஸத்யமேதஸே நம | – பலம் தரும் கனியே போற்றி |
| ஓம் தராதராய நம | – பின்னங்கள் தரும் எண்ணங்களுள் எல்லாம் சுகமே போற்றி |

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் பூராடம் சக்தி

நித்யத்ருப்தாபக்தநிதிர் நியந்த்ரீ நிகிலேச்வரீ
மைத்ர்யாதி வாஸநாலப்யாமஹாப்ரலய ஸாக்ஷிணீ

பராசக்தி பராநிஷ்டாப்ரஜ்ஞானகன ரூபிணி
மாத்வீபானாலஸாமத்தாமாத்ருகாவர்ண ரூபிணீ

மஹாகைலாஸ நிலயாம்ருணாலம்ருதுதோர்லதா
மஹநீயாதயாமூர்த்திர்மஹாஸாம்ராஜ்யசாலினீ

ஆத்மவித்யாமஹாவித்யாஸ்ரீவித்யாகாமஸேவிதா
ஸ்ரீஷோடசாக்ஷரீ வித்யாத்ரிகூடாகாமகோடிகா

கடாக்ஷகிங்கரீபூதகமலாகோடி ஸேவிதா
சிர ஸ்திதாசந்த்ரநிபாபாலஸ்தேந்த்ரதனுப்ரபா

ஹ்ருதயஸ்தாரவிப்ரக்யாத்ரிகோணாந்தர தீபிகா
தாக்ஷாயணீ தைத்யஹந்த்ரீ தக்ஷயஜ்ஞவிநாசினீ

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் பூராடம் சக்தி

சத்தியம் வேறல்ல ஸ்கந்தகுரு வேறல்ல

ஸ்கந்தகுருவே சத்தியம் சத்தியமே ஸ்கந்தகுரு

சத்தியமாய்ச் சொன்னதை சத்தியமாய் நம்பியே நீ

சத்தியமாய் ஞானமாய் ஸதானந்தமாகி விடு

அழிவற்ற ப்ரம்மமாய் ஆக்கிவிடுவான் முருகன்

திருமுறைகள் திருமறைகள் செப்புவதும் இதுவேதான்

ஸ்கந்தகுரு கவசமதைச் சொந்தமாக்கிக் கொண்டு நீ

பொருளுணர்ந்து ஏத்திடப்பா பொல்லாப்பு வினையகலும்

பிறவிப் பிணியகலும் ப்ரம்மானந்த முண்டு

இம்மையிலும் மறுமையிலும் இமையோருன்னைப் போற்றிடுவர்

மூவருமே முன்னிற்பர் யாவருமே பூஜிப்பர்

அனுதினமும் கவசத்தை அன்புடன் ஜபித்திடப்பா

சிரத்தா பக்தியுடன் சிந்தையொன்றிச் செப்பிடப்பா

கவலை யகன்றிடுமே கந்தனருள் பொங்கிடுமே

பிறப்பும் இறப்பும் பிணிகளும் தொலைந்திடுமே

கந்தன் கவசமே கவசமென்று உணர்ந்திடுவாய்

கவசம் ஏத்துவீரேல் கலியை ஜயித்திடலாம்

கலியென்ற அரக்கனைக் கவசம் விரட்டிடுமே

சொன்னபடிச் செய்து சுகமடைவாய் மனமே நீ

ஸ்கந்தகுரு கவசத்தைக் கருத்தொன்றி ஏத்துவோர்க்கு

அஷ்ட ஐஸ்வர்யந்தரும் அந்தமில்லா இன்பந் தரும்

ஆல்போல் தழைத்திடுவன் அறுகுபோல் வேரொடிடுவன்

வாழையடி வாழையைப் போல் வம்சமதைப் பெற்றிடுவன்

பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்ந்திடுவன்

சாந்தியும் ஸௌக்கியமும் ஸர்வமங்களமும் பெருகிடுமே

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

**10. கந்தர் அநுபூதி பூராடம் சக்தி**

கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்

பரிவாரம் எனும் பதம் மேவலையே

புரிவாய் மனனே பொறையாம் அறிவால்

அரிவாய் அடியோடும் அகந்தையையே.(37)

ஆதாளியை. ஒன்று அறியேனை அறந்

தீது ஆளியை ஆண்டது செப்புமதோ

கூதாள கிராத குலிக்கு இறைவா

வேதாள கணம் புகழ் வேலவனே.(38)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

**11. ராகங்களில் பூராடம் சக்தி**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| ராம பிரியா | ராம பிரியா | காமனஸ்ரமா | விஸ்வம்பரி |

**12. மூலமந்திரம்**

ஓம் சாயி ராமாய வித்மஹே ஆத்மராமாய

தீமஹ தன்னோபாபாப்ரசோதயாத்

**13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| வஞ்சி | கடற்யகொஞ்சி | சந்தன | எலுமிச்சை |

**14. பரிகாரம்**

- அழகு சாதனப்பொருட்கள் மற்றும் மஞ்சள் நிற இனிப்புகளை லட்சுமி நாராயணகோயிலில் தானம் செய்யவும்.

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு ஆகாசபுரீஸ்வரர் திருக்கோயில்,** கடுவெளி - தஞ்சாவூர்.


Aathma Trust **(ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra